ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1986/46 - 2016 සැප්තැම්බර් මස 29 වැනි බ්‍රහස්පතින්දා - 2016.09. 29

1986/46 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

**7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

எனது இலக்கம்: RPDS/LND/09/ACQ/05/09.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணித் துண்டுகளை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:-**

சப்பிரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மாவட்டத்தின் இரத்தினபுரிபிரதேச செயலாளர் பிரிவில் குருவிட கோரளை உடபத்துவ சிறு பிரிவின் 152 B வெரலுப கிராம அலுவலர் பிரிவில் இரத்தினபுரி நகர (பிரிவு இல. 3 வெரலுப, இரத்தினபுரி மாநகர சபை எல்லைக்குள்) கிராமத்தில் உள்ள இறுதிக் கிராம வரைபடத்தில் இல. இர. 313, அடிப்படை-யிலான பிம்புரை துண்டு இல. 01 என காட்டப்பட்டுள்ள மொத்த விஸ்தீரணம் 0.3729 ஹெக்டயார் கொண்ட காணித் துண்டுகளாகும்:

**1. துண்டு இல. 01**

காணியின் பெயர்: திவுல்கஹ கும்புர, முல்வக்கட, கொடகெலே; விபரம்: திறந்த தரிசு நிலம்; உரிமை கோருவோர்: அரசு; ஆரம்ப உரிமை கோருவோர்: எம். எம். செல்டன் பிரேமதிலக்க மற்றும் எச். ஜயலால் பிரேமசிங்ஹ, தெமுவாவத, இரத்தினபுரி; விஸ்தீரணம்: 0.3729 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித் துண்டுகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 25 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு, இரத்தினபுரி பிரதேச செயலகத்தில் என் முன் வெளிப்படுத்த வேண்டும்.

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈட்டு தொகையையும் 2016 நவெம்பர் 18 ஆந் திகதிக்கு முன்பாக எழுத்து மூலமான இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படி இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சி. எம். கோட்டவத்த,
பிரதேச செயலாளர்,
இரத்தினபுரி.

பிரதேச செயலகம்,
இரத்தினபுரி.
2016, செத்தெம்பர் 28.

10 – 358

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.